# பிரத்தியேக நாட்குறிப்பொன்றில் இருந்து...

லசஷ்மி

பி. இரயாகரன் எப்போதும் மக்களைப் பற்றியே சிந்தித்து, மக்கள் நலனுக்காகவே வாழ்ந்து, தனது புகலிட - புலம்பெயர் வாழ்வை 'மார்க்சிய' அடிப் படையில் மக்களுக்காகவே அர்ப்பணித்துக் கொண்டி ருப்பவர்.

இவர் எப்போதும் மார்க்சியக் கோட்பாட்டுச் சிந்தனையிலேயே வாழ்பவர். தான் பெறும் ஊதியம், தான் அணியும் ஆடை, தான் உண்ணும் உணவு, இன்னும் தன் வாழ்வாதாரத்திற்காகப் பெற்றுக் கொள்ளும் எந்த மயிரென்றாலும் அது மார்க்சிய வரையறைகளுக்குள் அடங்குகின்றதா என்று பரிசீலித்துத்தான் அவற்றைப் பெற்றுக் கொள்வார்.

இவருடைய கோட்பாட்டுக் கட்டுரைகள் உலகப் பிரசித்தி பெற்றவை. இவருடைய கட்டுரைகளில் உச்சத்தைத் தொடுபவை, இவர் எழுதியுள்ள 'ஆணா திக்கமும் பெண்ணியமும்' தொடர் பாகங்கள்.

பி. இரயாகரன் மற்றவர்கள்மீது சேற்றை வாரி இறைப்பதில் வல்லவர். இவர்பற்றி எழுதும்போது நாங்கள் மார்க்சிய சித்தாந்தக் கோட்பாட்டுக்குள் நின்றுதான் இவர்மீது விமர்சனங்கள் கூறவேண்டும். அதேசமயம் எழுதுபவர் மக்கள் நலன் குறித்து, சுயவிமர்சனத்துடன் கூடிய, அக்கறையுள்ளவராக இருக்க வேண்டும். மக்களைப்பற்றிப் பேச வேண்டும் அப்போது நீங்கள் பி. இரயாகரனை விலக்கி விட்டுத் தான் பேசவேண்டும். அவர் மக்கள் நலன்பற்றி மட்டுமே பேசுவதற்கு மார்க்ஸினால் அனுப்பி வைக்கப் பட்டுள்ள இறைமறை தூதர். இப்போது நீங்கள் எல்லோரும் அவர் சொல்லும் மக்கள் பற்றி மட்டுமே பேசவேண்டும். அதுவும் அவர் சொல்லும் கோட்பாட்டு விளக்கத்துடனே. அவருடைய கட்டுரைகளை எல்லாம் நீங்கள் கட்டு டைத்துப் பார்த்தால் அங்கு மார்க்சியக் கோட்பாட் டினுள் பெண்ணியம் தலைவிரித்தாடும். இப்போது இவர் இந்த எழுத்தைக் கட்டுடைக்க வெளிக்கிட்டால் (மன்னிக்க வேணும், மார்க்சியக் கோட்பாட்டுரீதியாக விமர்சிக்க வெளிக்கிட்டால்) பெண்ணியம் புதுப் பரிமா ணம் கொள்ளும். மொழி வக்கிரம் பற்றிப் பேசிக் கொண் டிருக்கும் பி. இரயாகரன், மொழிபற்றிய எந்தப் பிரக்ஞை யுமற்றவர் என்பதுதான் எனது அபிப்பிராயம். சொல் கின்ற விடயத்தில் உள்ளவற்றைப் பார்க்காது தன்னு டைய மொழியின் வக்கிரம் பற்றிப் பேசுகிறார்கள் என்கிறார். மொழி என்பது மனிதர்களிற்கிடையேயான தொடர்பு ஊடகம். அது எப்படிப் பாவிக்கப்படுகின்ற தென்பது ஒருவரை அறிந்து கொள்வதற்கான முக்கிய விடயம் (தடயம்). இந்த அடிப்படையில், மார்க்சியச் சிந்தாந்தக் கோட்பாட்டு ரீதியாக அவர் சிந்திப் பதனால் இப்போது, தான் trendஇல் இல்லாத, பெண்ணியம் பற்றி எழுதிக்கொண்டு வருகிறார். 'கற்பு' எனும்போது எந்தக் 'கற்பு' பற்றிப் பேசுகிறார். எங்கே 'கற்பு' இருக்கிறதோ அங்கேதான் அது அழிக்கப்படலாம். இவரின் கட்டுரை களில் ஆங்காங்கே 'கற்பழிப்பு'ம் நடைபெறும்.

இடதுசாரித்துவம், மார்க்சியக் கோட்பாடு என்று பேசியவுடன், இவை பற்றிய எடுகோள்களுடனும் கோட் பாடுகளுடனும் ஏற்கனவே தங்களை அடையாளப் படுத்திக் கொண்டவர்கள் இவற்றை (இவரை) விமர்சிப் பதைத் தங்கள் புனிதத்துக்கு மாசு கற்பித்துவிடும் என்று கருதுகிறார்கள். நாங்கள் யாரை எடுத்துக் கொண் டாலும் சரி, ஒன்றைப் புனிதம் இல்லை என்று சொல்லிவிட்டு இன்னொன்றைப் புனிதமாக்கும் செய லைத்தான் இங்கு செய்து கொண்டிருக்கிறோம். கோட் பாட்டுக்கும் வாழ்க்கைக்கும் இடையில் ஒரு சென்ரி மீற்றர் பிசகினாலும் அவர்கள் மனிதர்களாகவே கணக் கெடுக்கப்பட முடியாதவர்கள் என்று என்று நிஜமாகவே நம்புபவர்களிற்கிடையில் எங்கள் புகலிடப் பயணம்.

என்னை சிலர் கேட்டார்கள், பி. இரயாகரனின் 'ஆணாதிக்கமும் பெண்ணியமும்' தொடரைக் கட்டு டைக்கும்படி, பி. இரயாகரனின் பெண்ணியத்தைக் கட்டு டைப்பதற்கு அவருடைய கட்டுரைகளில் தொடர்ச்சி யாகப் பாவிக்கப்பட்டு வரும் மொழிப் பிரயோகங்களே போதும் - சில உதார ணங்களாக, - மலட்டுத்தன்மை, தாலி அறுப்பு, கற்பு, விபச்சாரம், கற்பழிப்பு இப்படியாக. (பெண்நிலைவாத நோக்கில் இவைகளிற்கான அர்த்தம் என்னவென்று லெனின் நூல் திரட்டு, மூலதனம், புதிய கலாச்சாரம் போன்றவற்றில் மக்கள் நலன் சார்ந்த விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். மற்றும் படி எந்தக் கோட்பாட் டாளர்களுடைய விளக்கங்களும் பி. இரயாகரனுக்கு கோட்பாடுமில்லை. விளக்கமும் இல்லை)

பி. இரயாகரன் மக்கள் பற்றிக் கொண்டுள்ள

அக்கறைக்கு மக்கள் இவரைப் பற்றியிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஒன்றையும் இதுவரை காணவில்லை. இவர் மக்கள் பற்றிக் கதறும் கதறல் இவருடைய மக்கள் யாரினது காதிலும் விழவில்லை என்பது மிகவும் அபத்த மானதொரு நிலைதான். பி. இரயாகரன் கட்டுரைகளை எழுதித் தள்ளுகிறார். கட்டுடைப்புகளை வாரி இறைக் கிறார். அதற்கான கால அவகாசமும் கோட்பாட்டு ரீதியான விளக் ங்களும் எக்கச் சக்கம்.

ஆனால் இவருடைய கட்டுரைகளைப் படித்தபின் நீங்கள் வரும் முடிவு, பி. இரயாகரனைத் தவிர யாரும் மக்கள் பற்றிப் பேசுவதில்லை. என்ன சமாச்சார மென்றால், இவருக்கு மணி கட்டும் வேலைக்கு யாரும் போவதில்லை. அந்தப் பணியைச் செய்யத் தூண்டும் பகீரதப் பிரயத்தனம் இவரிடம் உச்சத்தில் உண்டு. ஆனால் யாரும் உணர்ச்சிவசப்பட்டுக் கூட இவர் பக்கமாகத் தலைவைத்துப் படுப்பதில்லை ஓரிருவரைத் தவிர. இவரும் யார் பக்கமும் தலைசாய்க்கமாட்டார்.

இப்படியாக இருந்து கொண்டிருந்த காலத்திலே, சமர் போய் இவர் அரங்கமேறி தன் சேறடிப்புகளை கோட்பாட்டுரீதியாக அருளிக் கொண்டிருந்த காலத் திலேதான், அண்மையில் பாரிஸில் நடந்த ஒரு விவாதக் கூட்டமொன்றில் விஸ்வலிங்கம் சிவலிங்கம் அவர்கள் இவருடன் வம்பிற்குப் போய் மாட்டிக் கொண்டார். 'அன்றொரு நாள் நீங்கள் புலிக் கைதி' என்ற பதாகை உங்களிடம் இருந்தால் மட்டும்தான் நீங்கள் மக்கள் பற்றிப் பேசலாம். புலிகள் தோன்றுவதற்கு முன்பிருந்தே தீவிர அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் எவருமே பி. இரயாகரனைப் பொறுத்தவரையில் மண்ணொடு மண்ணாகிப் போயிருக்க வேண்டும். இப்படி இவர் நினைத்துக் கொண்டிருக்க அவரைவிடப் பலமாக, அல்லது நியாயமான கோட்பாட்டுத் தர்க்க நியாயங்கள் பேச என்று அவருக்கு முன்னதாகவே அரசியல் பேசிக் கொண்டிருந்தவர்கள் வந்தால் என்னாவது. வந்தது தான் வந்தார்கள், பி. இரயாகரனின் 'மக்கள் பற்றிய கோட்பாட்டுச் சித்தாந்தங்கள்' படிக்காது எப்படி வர முடியும்? எப்படி வாய் மொழிய முடியும்? இது என்னே நியாயம்! எனவே மக்களே! நீங்கள் யாராவது மக்கள் பற்றிப் பேசுவதென்றால் அல்லது மக்கள் பிரச்சி னையை மக்களைத் தவிர்க்காது பேசுவதென்றால் நீங்கள் புகலிட-புலம்பெயர் கோட்பாட்டு நாயகன் பி. இரயாகரனின் மக்கள் அரசியல் சித்தாந்தக் கோட் பாடுகளைப் படித்தபின்புதான் மக்கள் பற்றிப் பேச வேண்டும். நீங்கள் பேசுவது பி. இரயாகரனின் மக்கள் பற்றியல்ல. அதைவிடுத்து நீங்கள் அரசியல் இங்கு பேசினால் விஸ்வலிங்கம் சிவலிங்கத்துக்கு இப்ப நடந்ததுதான் உங்களுக்கும் நடக்கும். So Be Careful Comrades!

இங்கு இன்னுமொரு முக்கியமான குறிப்பொன்றைச் சொல்ல விழைகின்றேன். இந்த மார்க்சியம் இன்னும் விளிம்புநிலை மாந்தரின் விடுதலை நோக்கிய கோட் பாடுகள் பற்றிப் பேசிக் கொண்டிருப்பவர்களில் அநேகர் கோட்பாட்டாளர்கள் (எடுகோளாளர்கள்) மட்டுமே என்ற அடிப்படையில் பார்க்கும் அனுபவம் மட்டும்தான் எஞ்சியுள்ளது. மார்க்சியம் பற்றிப் பேசுபவர்கள் அனை வரையும் நாங்கள் மார்க்சிஸ்ட்டுக்களாக அடையாளம் கண்டுவிட்டதாகப் பெருமைப்படுவதும் அவர்கள்மீது மார்க்சிஸ்ட்டுகள் என்ற பதாகையைச் சூட்டுவதும் சுத்த bull shit என்றுதான் படுகின்றது. இசங்கள் பற்றிக் கற்றுக்கொண்டவர்களாகத் தங்களை அடையாளம் காட்டுபவர்களை அல்லது இசங்கள் மீது பிடிப்புக் கொண்டவர்களாக தங்களைக் காண்பிப்பவர்களையும் நாங்கள் அந்தந்த இஸ்ட்டுகளாக்கி அதாவது வாதி களாக்கி, எங்களையும் கஷ்டப்படுத்தி அவர்களையும் சங்கடமான நிலைக்குள் தள்ளி போலிப் போர்வை போர்த்தத் தூண்டும் அக்கிரமத்தைச் செய்பவர் களாகவே நாங்கள் இருக்கின்றோம்.

என்ன சிக்கல் என்று சொன்னால், நீங்கள் இந்த இசம் பேசுபவர்களைப் பற்றிய ஏதாவதொரு எதிர்மறைக் குறிப்புச் சொன்னால் போதும் உடனேயே அந்தந்த வைதீகர்களினால் நீங்கள் அவ்விசத்துக்குத் 'துரோகி' என்று பட்டமளிக்கப்பட்டு விடுவீர்கள். மேலும் நீங்கள் பேசும் இசம் உங்கள் எதிரே இருப்பவர் பேசும் இசத்தின் கோட்பாட்டுக்குள் அடங்க வேண்டும். எதிரே இருப்பவர் உங்களைவிட அறிவில் கூடியவர்-குறைந்தவர் என்ற முன்னனுமானங்களுடனேயே உரையாடல்கள். முன்னே அமர்ந்திருப்பவர் நண்பரா, எதிரியா அல்லது துரோகியா? இதனைத் தீர்மானிப்பதற்கு விவாதங்கள் தேவையில்லை. உடன்பட்டால் நண்பர். எதிர்த்துக் கதைத்தால் எதிரி. உள்ளடக்கத்தில் உள்ள குறை களை அவர்களுக்கே புரியுமாறு எடுத்துணர்த்தி விட்டீர்கள் என்றால் அடுத்த நிமிடமே நீங்கள் துரோகி.

புனிதங்களைக் கட்டமைக்க புனிதங்களற்ற மனிதர்கள் அனைவரும் புனிதமாகச் செயற்படுவதாக புனிதமற்றுச் சிந்திப்பதுதான் இவற்றில் புனிதம் என்பதே இல்லை என்பதை நம்பப் போதுமானதாகின்றது.

மனிதர்களின் விடுதலைக்காக ஏற்படுத்தப்படும் எந்தக் கோட்பாடுகளுமே சிக்கலானவை. ஒற்றைப் பரிமாணத்துடன் எதையுமே பார்க்கப் பயிற்றுவிக்கப்பட் டவர்கள் எவராலும் மனிதர்களின் விடுதலையைக் கண்டடைய முடியாது. ஏனெனில் மனித விடுதலை என்பது மிகவும் சிக்கலானது. சிக்கல்களுக்குள் இது அல்லது அது என்று ஒரு சமன்பாட்டைக் கண்டுபிடிக்க முடிந்தால் அதுவே மானுட விடுதலையின் உச்சம். முதலில் திறந்த விவாதங்களுக்குரிய ஒரு வெளி வேண்டும். அந்த வெளியை நாங்கள் கண்டடையாத வரை அது நிச்சயமாக முடியாது. இறுக்கமான எல்லை களுடன் நாங்கள் இருக்கும்வரை சுதந்திரத்திற்கான வெளி எப்போதுமே எங்களுக்குத் தெரியப்போவ தில்லை. சுதந்திரம் என்பதை நாடு பிடிப்பது என்று அர்த் தப்படுத்திக் கொள்ளாதிருக்கும்படி தோழர்களிற்குப் பணிவான வேண்டுகோள்.

பி.கு: தன்சித்தாந்தக் கட்டுரைகளை யாரும் படிப்பதில்லை, கருத்து கள் தெரிவிப்பதில்லை என்று பி. இரயாகரன் அடிக்கடி விசனப்பட்டுக் கொள்வதாகத் தகவல். ஆனால் பி. இரயாகரனோ வி. சிவலிங்கத் தின் எந்த அரசியல் கட்டுரைகளையும் வாசித்திருப்பதில்லை என்று தான் படுகின்றது. தன் வெளிப்பாடுகளை தர்க்கத்தின் மூலம் மட் டுமே முன்வைக்கும் பழக்கமும் பரிச்சயமும் உள்ளவர் வி. சிவலிங் கம். அதைக் கண்டுகொள்வதற்கான அணுகுமுறை . இவரின் கோட்பாட்டுச் சிந்தாந்தத்தில் இல்லைப் போலும். So, laisse tombé!

## 2007ம் ஆண்டின் மனித உரிமைப் போராளிகளுக்கான மார்ட்டின் எனெல்ஸ் விருது



இவ்வாண்டுக்குரிய மனித உரிமைகளுக்கான இச் சர்வதேச விருது மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) அமைப்பைச் சேர்ந்த ராஜன் கூல், கோபாலசிங்கம் சிறீதரன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வரும் அதிமுக்கிய சர்வதேச அமைப்புக்களான சர்வதேச மன்னிப்புச் சபை, மனிதஉரிமைகள் கண்காணிப்பு, சித்திரவதைக்கெதிரான உலக அமைப்பு, மனித உரிமைகளுக்கான சர்வதேச ஒன்றியம், ஜெர்மன் டியாக்கோனி போன்ற சுமார் பதினொரு அமைப் புக்கள் இணைந்து உருவாக்கிய விருது இதுவாகும். சர்வதேசமெங்கும் அரசியல் கொந்தளிப்புகள், உயிராபத்து, சித்திரவதை, கொலை, கடத்தல் மலிந்துள்ள நாடுகளில் துணிச்சலுடன் குரலற்றவர்களின் குரலாகக் கிளம்பும் போராளிகளுக்கு வருடாவருடம் இவ்விருது வழங்கப் படுகின்றது. இலங்கையைச் சேர்ந்தவர்களுக்கு இவ்விருது முதல் தடவையாக வழங்கப்படுகின்றது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த 87ம் ஆண்டளவில் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட இவ்வமைப்பு அக்காலத்தில்



இராணுவத்தாலும் ஆயுதக் குழுக்களாலும் இந்திய இராணுவத்தாலும் வாயடங்கி மனம் சலித்த மக்களின் உரிமைக் குரலாக மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் ‘முறிந்த பனை’ என்கின்ற அறிக்கைகளின் தொகுப்பு வெளிக் கொண்டுவரப்பட்டபோது, இவ்வமைப்பைச் சேர்ந்த டாக்டர் ராஜனி திரணகம அவர்கள் 1989ம் ஆண்டு புலிகளினால் குரூரமாகக் கொல்லப்பட்டு துரோகியாக்கப்பட்டார்.

இதன் சக ஆசிரியர்களில் இருவரான இவ்விருது பெறுபவர்கள் இருவரும் தீவிர மரண அச்சுறுத்தல்களின் மத்தியிலும் கடந்த 18 வருடங்களாக அரசு, விடுதலைப்புலிகள், ஏனைய அமைப்புகள் இலங்கையில் எவ்வாறு மனித விரோதச் செயல்களில் ஈடுபட்டனர் என்பதை ஆவணப்படுத்தி அறிக்கைகளாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வெளியிட்டனர். இவர்களது அறிக்கைகள் அரசு சாரா நிறுவனங்களிற்கான அடிப்படைத் தகவல் களஞ்சியங்களாகக் கருதப்பட்டன. மனிதஉரிமைப் போராளிகள், மாற்றுக் கருத்தாளர்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு வரும் அரசியல் சூழல் இலங்கையில் நிலவி வருகின்ற போதிலும் எல்லாவகைப் பீதிகளையும் புறந்தள்ளியும், உதவியாளர்கள் பலர் கொல்லப்பட்ட நிலையிலும் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வரும் மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களான இவர்கள் இருவருக்கும் இவ்விருது வழங்கப்பட்டிருப்பது ஜனநாயத்துக்காகப் போராடுபவர்களிற்கிடையில் அங்கீகாரம், நம்பிக்கை, மகிழ்ச்சி ஆகியவற்றை சிறிதளவிலேனும் ஏற்படுத்தி இருக்கிறது.




ராஜன் கூல் அவர்களுக்கும் கோபாலசிங்கம் சிறீதரன் அவர்களுக்கும் கிடைத்த இவ்விருது மிகப் பொருத்தமானதும் பெருமைக்குரியதுமென்று ‘உயிர் நிழல்’ கருதுகின்றது.